Since 1972

ஜெம்ஸ் சத்தம்

மே : 2020

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் – 2
சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

பெருமைக்கு ஏற்றான தேவன் – 12

ஊரடங்கு கால உதவிகள் – 16

பணித்தளச் செய்திகள் – 19

முன்னேற்றப் பணி முகவரிகள் – 23

Published by

GEMS Educational and Media Services
14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Published for

Gospel Echoing Missionary Society

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான
ஜெபப் பங்காளரே,

"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" (யோவான் 15:9) என்று பிதாவினுடைய அன்பின் சிகரத்தை நமக்குக் காண்பிக்கிறவரும், பிதாவை நோக்கி, "நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை உலகம் அறியும்படிச் செய்யும்" என்று வேண்டுதல் செய்தவருமாகிய அன்பர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். (யோவான் 17:23)

அந்த ஜெபத்திலேயே, **உலகம் அதனை அறியவேண்டும் என்றும் அழுத்தியே சொல்லுகிறார்**. எனவேதான், "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று சொல்லுகிறார் (யோவான் 20:21). **பிதா தன் செல்லக் குமாரனை அனுப்பும் வேளையில் இருந்த இந்த உலகத்தின் நிலைதான் இன்றைக்கும் உண்டு**. அநேக நேரங்களில், இயேசு இந்த உலகத்தில் வந்தபோது, **உலகம் இவ்வளவாய் கெட்டிருக்கவில்லை என்று நம்மை யோசிக்கத் தூண்டலாம்**. ஆனால், வேதப் புத்தகத்தின் பக்கங்களை நாம் கருத்தாய் படித்தால் அது உண்மையல்ல என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

இயேசு இந்த பூமிக்கு வந்த வேளையில் அதனுடைய நிலமை என்ன என்பதனை சற்று கவனித்துப் பார்க்கும் வண்ணமே இந்த மடலை எழுதுகிறேன். சிலவற்றை மட்டும் பட்டியலிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1. அன்றைய அரசியல் உலகு

தன்னுடைய இடத்தில் வேறொருவரா? வரவிடாமல் தடுப்பதற்கு எந்த சட்டத்தையும், அதிகாரத்தையும் உபயோகப்படுத்துவது இன்றைய நியதி. குறிப்பாக இளையவர்கள் எழும்பிவிடக்கூடாது என்பதில் கூடுதல் கவனம்.

இயேசு இந்த உலகத்தில் வந்தபோது, இதுவே அதிகாரப் பீடத்தில் இருந்தவர்களை ஆட்டிப்படைத்தது என்பதனை புதிய ஏற்பாட்டின் முதல் பக்கங்களிலேயே சந்திக்கிறோம். ஏரோதின் வஞ்சனை: "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவரை" ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கண்டுபிடிக்கத் தவறியபோது, அனைத்து குழந்தைகளையும் (இரண்டு வயதிற்கு உட்பட்ட) அழித்தே தீருகிறான். (மத். 2:2,16)

அநேக நேரங்களில், இந்த அரசியலின் குணம் திருச்சபைகளிலும் தலைவிரித்தாடுகிறது. முதியவர்கள், அனுபவம் உள்ளவர்கள் சபைக்குத் தேவை; அவர்களின் ஆலோசனை மிகவும் தேவை; அதே நேரத்தில், இளைய தலைமுறைக்குப் போதுமான வாய்ப்பும், சுதந்தரமும் தரப்படவேண்டும் என்பதில் நான் நம்பிக்கை உள்ளவன்.

தன்னுடைய அதிகார பலத்தினைக் காட்டித்தானே ஏரோது இப்படிப்பட்ட படுகொலையில் இறங்கினான். எத்தனை குழந்தைகள் கொல்லப்பட்டார்கள் என்பது நமக்குத் தெரியாது; ஆனால், தெருக்களில் ஓலம் கேட்டது; அலறலின் சத்தம் காதை அடைத்தது. ஓடி ஆடித் திரிந்து, மழலைச் சொல்லை உதிர்த்து மகிழ்வித்த குழந்தை கண்கள் முன்னாலேயே வெட்டிக் கொல்லப்படும் காட்சியை குடும்பத்தில் யார்தான் சகித்திருக்கமுடியும்.

2. கஷ்டப்படுவோருக்காகக் கலங்காத கல்மனம்

திமிர்வாதக்காரனை நான்கு பேர் தூக்கிக்கொண்டு கூட்டத்தினரிடத்தில் கெஞ்சுகிறார்கள். இவனுக்குத்தான் இயேசு மிகவும் வேண்டியவராய் இருக்கிறார்; தயவு செய்து இடம் கொடுங்கள் என்கிறார்கள். **ஆனால், அவரின் நன்மையை அனுபவித்தக் கூட்டம்,**

அவரின் அருள் மொழிகளைக் கேட்ட கூட்டம் கொஞ்சமும் அசையவில்லையே. (மாற். 2:1-12)

இன்றைக்கு பரிதாபம் கொள்வதற்குப் பதிலாக **படம் பிடிப்பதிலேய** கவனமாய் இருக்கிற திரள் கூட்டத்தினைக் காணக் கூடுமே (எல்லார் கையிலும் மொபைலில் கேமரா இருப்பதினால்).

கூரையைப் பிரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அந்த நான்கு பேருக்கும் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? இயேசுவை சுற்றி நின்றவர்களின் **கடின மனமும், கல்நெஞ்சும்தானே.** தன் வண்டியிலேயே அடிபட்டால்கூட, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓட்டம் பிடிப்போர்தானே ஏராளம். **துணிச்சலான நல்ல சமாரியர்களை இவ்வுலகம் எப்போதாவதுதானே காண்கிறது.**

3. விபச்சாரத்தினைக் கண்டிக்கக்கூடாது

வெளிப்படையாகக் காண்கிற விபச்சாரப் பாவத்தினைக்கூட **கண்டிக்கக்கூடாத மனநிலைக்கு** இந்த உலகம் தள்ளப்பட்டுவருகிறது. "கண்டுகொள்ளாதே; **இது எல்லாம் சகஜம்**" என்று சொல்ல அதற்கு வாய் கூசவில்லை.

அன்று அரசனாயிருந்தாலும், "நீ உன் சகோதரனின் மனைவியை வைத்திருப்பது சரியல்ல" என்று சொன்ன யோவான் ஸ்நானனின் தலையை வாங்கத்தானே ஏரோதியாளும் (மாற்றான் மனைவி) துடித்துக்கொண்டிருந்தாள். அதற்கு தன் மகளையே உபயோகப்படுத்த அவள் தயங்கவில்லையே! (மாற். 6:17-27)

தன் திருமண உறவினைக் கடந்து, வேறொரு பெண்ணோடு வாழ்க்கை நடத்துவதனை, உயர் நீதிமன்றமும் கடிந்துகொள்ளக்கூடாது என சட்டம் தீட்டுகிறதே. அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான் (எரே. 5:8) என்ற தீர்க்கன் எரேமியாவின் கலமோ!

அலுவலகத்திற்கு ஒரு ஆள், அடுப்பண்டைக்கு ஒரு ஆள் என்ற நிலை பெருகிவருகிறதே!

4. லஞ்சப் பேய்

ஆயக்காரரும், போர்ச்சேவகர்களும் (காவல்துறை) தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று மனந்திரும்புதலைப் பிரசங்கித்த யோவானைக் கேட்டபோது, அவன் பதிலில் இருந்து நமக்குக் கிடைக்கும் உண்மை, “லஞ்சம் தலைவிரித்து ஆடினதையே” (லூக். 3:12-14), கட்டளையிட்டதற்கு மேல் வாங்குவதும், சம்பளம் போதாது என்று மற்றவர்களை வருத்தப்படுத்தி வசூலிப்பதும் **அன்றைய வடிக்கை** என்பதனையே வெளிப்படுத்துகின்றது; இன்றும் அதுதானே!

இயேசுவின் உயிர்த்தெழுதலை மறைக்க பிரதான ஆசாரியனும் உபயோகப்படுத்தியது இந்த பேயைத்தானே (மத். 28:11-15). தனக்கு லஞ்சம் கொடுப்பான் என்று நினைத்துதானே பேலிக்ஸ்-ம் பவுலைக் கூப்பிட்டு அநேகந்தரம் பேசுகிறான் (அப். 24:26). இன்றைக்கு போல அன்றும் லஞ்சம் தலைவிரித்தாடியது.

5. பாவம் வெளியரங்கமாக அரங்கேற்றப்படுதல்

ஊருக்கே தெரியும் அவள் “பாவியான ஸ்திரீ” என்று (லூக். 7:37). விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டவள் என்று கூறித்தானே ஒரு பெண்ணை கல் எறிய கொண்டுவந்தார்கள் இயேசுவிடம் (யோவான் 8:3). இஸ்ரவேலிலா இவ்வளவு மதிகெட்ட செயல்கள். **தேவ கட்டளையை தேவ விரல்களினால் எழுதிப் பெற்ற ஜனத்தின் மத்தியிலா இத்தனைப் பெரிய பாவம் பகீரங்கமாகத் தெரிகிறது.** ஆம், இன்னும் தேவ மக்கள் என்று சொல்லப்படுவோர் நடுவிலும் இது காணப்படவில்லையா?

6. காணிக்கைப் பணம் அலங்காரத்திற்கு

தேவாலயம் காணிக்கையினால் அலங்கரிக்கப்பட் டிருந்ததனைக் கண்ட சீஷர்கள், அதனைக் குறித்து இயேசுவிடமே

கேட்கிறார்கள் (லூக். 21:5). **பண்டிகை என்ற பெயரில் உண்டாக்கப்படும் அலங்காரங்களும், வான வேடிக்கைகளும், நடைபெறும் கூத்துக்களும்** அதனையே நமக்கு ஞாபகப்படுத்துகிறதோ!

அலங்காரமும், ஆடம்பரமும் **சாத்தான்** உபயோகப்படுத்தும் ஆயுதங்கள் அல்லவோ (ஏசா. 14:11). காணிக்கை கொடுக்கப்பட்ட நோக்கம் கெட்டுப்போனதே.

7. இலவசங்களுக்காக ஜனங்கள் ஏங்குவது

ஜனங்கள் வழியில் சோர்ந்துபோய்விடக்கூடாது என்ற கரிசனையில் இயேசு ஐந்து அப்பம், இரண்டு மீன்களை ஆசீர்வதித்து 5000 புருஷர்கள் முதலாய் சாப்பிட வழிசெய்தார். ஆனால், ஜனங்களோ! இயேசுவை தேடிக்கொண்டு அலைகிறார்கள். அதனைக் கண்ட இயேசு, "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். (யோவான் 6:26)

இன்றும் இலவசங்களைப் பெறுவது இந்திய மக்களின் நோக்கமாகவே மாறிவிட்டது. அரசியல்வாதிகளும் இதனை தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, மக்களை ஒருவித மயக்கத்தில் தள்ளி, தங்களுடைய ஆதாயத்தினை பெருக்கிக்கொள்ளுகிறார்களே! மக்களின் மனநிலை அன்றும் இன்றும் ஒன்றுதானோ!

8. மாய்மாலமான பக்தி

வெளிப்புறத்தினையும், வெளித்தோற்றத்தினையுமே குறித்த அதிக கவலை இன்று காணப்படுகிறதுபோலவே, அன்றும் காணப்பட்டதினால்தான், இயேசு கடுமையாக கடிந்துகொள்கிறார்.

சந்தைவெளியில் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்யப்படுகிற ஒப்பனைகள் (மத். 23:5), மரியாதை செய்யப்படவேண்டுமென்பதில் அலாதி பிரியம் (வச. 6,7), பார்வைக்கான நீண்ட

ஜெபம் (வச. 14), காணிக்கையையே பிரதானப்படுத்தும் பாதகம் (வச. 16-19), வெளிக்காட்டப்படும் பரிசுத்தம் (வச. 25), மனுஷருக்கு தன்னை நீதிமானாகக் காண்பிக்க எடுக்கப்படும் முயற்சிகள் (வச. 28), வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பான போலி வாழ்வு (வச. 27), தேவையற்ற பாராட்டு விழாக்கள் (வச. 29) போன்றவற்றை இயேசு எத்தனையாய் கண்டிக்கிறார். அது அந்த நாட்களில் மாத்திரம் அல்ல, இன்றைக்கும் அதே நிலை.

"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்ற அங்கலாய்ப்பு. அது வெறும் உதட்டளவில்தானோ! (மத். 15:8,9) என்ற ஏக்கத் தொனி தேவ சந்நிதியிலிருந்து புறப்படவில்லையோ!

9. கைவிடப்பட்ட பெற்றோரும் மற்றோரும்

பதினெட்டு வருடமாய் கட்டப்பட்டிருந்த பெண், ஒழுங்காக ஆராதனைக்கு வருகிறவள். பெதஸ்தா குளத்தண்டையிலே அனைவராலும் கைவிடப்பட்ட 38 வருடமாய் படுக்கையில் இருந்த ஒரு மனிதன் (லூக். 13:16; யோவான் 5:5-7). மேலும், பெற்றோருக்குச் செய்யவேண்டிய உதவிகளைச் செய்யாமல், **ஆலயத்தில் கொர்பான் காணிக்கை கொடுத்தால் போதும் என்ற போதனை (மத். 15:4-6) எத்தனை பெற்றோரை ஆதரவு அற்றவர்களாக மாற்றியிருந்தது!** அதுமாத்திரமல்ல, கைவிடப்பட்ட விதவைகளை (வயது சென்றவர்கள்) பராமரிக்கக்கூடாத சபையின் தன்னலம் (1 தீமோ. 5:10,16). தரித்திரருக்கு உதவி செய்யத் தயங்கும் சபைகள் இன்று ஏராளம் அல்லவா! (யோவான் 12:8)

10. மேய்ப்பனற்ற நிலை

ஜனங்கள் இன்று உபதேசக் குழப்பங்களிலும், உறவு குழப்பங்களிலும் அல்லல்பட்டு திரிகிறதற்கான காரணம் மேய்ப்பர்கள் இல்லாமையே. அன்று இயேசு அங்கலாய்த்தார் (மத். 9:36). இன்று மேய்ப்பர்கள் தங்கள் கடமையை உணராமல், செய்யாமல் தங்களையே மேய்த்துக்கொண்டிருக்கும் நிலை அதிகம்.

மேய்ப்பனானவன் மந்தைக்கு மாதிரியாய் (1 பேதுரு 5:3), உற்சாக மனதோடு, அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, மனப்பூர்வமாய் மேய்க்க அழைக்கப்பட்டவர்கள் (1 பேதுரு 5:2). காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவான் (எசே. 34:16). அப்படிப்பட்டவர்களையே கர்த்தருடைய கண்கள் தேடினபோது, சுற்றிலும் ஆசாரியர்களும், வேதபாரகரும் இருந்தபோதிலும், **நல்ல மேய்ப்பர்களையே இயேசு தன்னுடைய நாட்களில் தேடுகிறார் என்றால் இன்றைக்கும் அப்படித்தானோ!**

11. பாரம்பரியத்திற்கே முக்கியத்துவம்

அநேக முன்னோர்களின் பாரம்பரியம் வீணான நடக்கை என்பதே பேதுருவின் முடிவு (1 பேதுரு 1:18). பாரம்பரியத்தினை பின்பற்றப்போய், தேவனுடைய கற்பனை அவமாக்கப்படுகிறதே (மத். 15:6) என்பது இயேசுவின் தீர்ப்பு.

இன்றைக்கும் பாரம்பரியம் என்ற போர்வையில் பல நலமான காரியங்களில் மக்கள் மனதைச் செலுத்தாத வண்ணமும், சத்தியத்திற்கு செவிகொடுக்காத வண்ணமும், நேரம், பணம், தாலந்துகள், கிருபைகள் போன்றவை சேதமாகிறது மாத்திரமல்லாமல், வீணடிக்கப்படுகிறதே.

எது முக்கியம்? என்ற அறிவுக் கேள்விகள் ஆண்டவரின் வெளிச்சத்தில் பார்க்கக்கூடாத வண்ணம், சிலரைத் திருப்தியாக்கவேண்டி செய்யப்படுகிறதினால், **வரும் சந்ததியும்** வெளிச்சத்தினை இழக்க நேரிட்டு, இடறிப்போக நேரிடுகிறதே. **வாழ்வு முறையும், உறவு முறையும்** முறியடிக்கப்படும் பொல்லாப்பு **வரும் சந்ததியையும்** தொடர்கிறதே!

12. ஜாதிப் பேதம்

தன்னிடத்தில் குடிக்க தண்ணீர் கேட்டவனுக்கும், உமக்கும் உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள் ரெபேக்காள்;

அதுவும் ஒரு அந்நியனுக்கு. (ஆதி. 24:18,19)

ஆனால், அவள் சந்ததியில் வந்த சமாரியப் பெண்ணோ, “நீர் யூதனாயிருக்க, சமாரிய பெண்ணாகிய என்னிடத்தில், தாகத்துக்குத் தா என்று எப்படிக் கேட்கலாம்” என்று ஜாதி உணர்வை வெளிப்படுத்துகிறாள். (யோவான் 4:9)

“யூதன் ஒருவன் அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்கு வரவாயிருப்பது யூதனுக்கு விலக்கப்பட்டிருக்கிறது” என்பதுதான் **அபிஷேகம் பெற்ற பேதுருவின்** எண்ணம். (அப். 10:28)

இயேசுவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டு, கழுவப்பட்டவரின் நிலையும்கூட இன்று அதுவேதான். உலகில் அந்தக் காரியத்தினை வைத்தே அரசியல்வாதிகள் தங்கள் வியாபாரத்தினை செய்துவருகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அது அதிகரிக்கும் வண்ணமே நம்மைச் சுற்றி காரியங்கள் நடைபெறுகிறது.

ஆவிக்குரிய தலைவர்கள் சிலர் இதனை பகீரங்கமாகவே பேசி செயல்படுவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. அன்றைக்கும் அதே நிலமை. இந்த சூழ்நிலையில்தான் இயேசு பூமிக்கு அனுப்பப்பட்டார்.

13. பணப் பைத்தியம்

தாழ்மை மிகுந்த தலைவன் ஒருவன் (லூக். 18:18), தெருவிலே முழங்கால் போடக்கூடிய அளவு தாழ்த்த அறிந்த வாலிபன் (மாற். 10:17); ஆனால், **பணப் பைத்தியம் அவனை கவலை கொண்டவனாகவே திருப்பிக்கொண்டுபோக வைக்கிறது** (மாற். 10:22). தேவ வரங்களைப் பணத்தினால் சம்பாதிக்கவே சீமோன் என்ற மந்திரவாதியும் வாஞ்சித்தான் (அப். 8:20). **வருவாயில் பாதிப்பு என்பதினால்தான் தேசக் கலவரத்தையே தூண்டிவிட்டான்** தெமேத்திரியு என்னும் தட்டான். (அப். 19:23,24)

பண ஆசையே அநேகரை திசைத் திருப்பிவிட்டுக்கொண்டிருக்கிறதை நாம் கண்கூடாக இன்றைக்குக் காண்கிறோம்.

14. வழிபாட்டு ஸ்தலங்கள் பணம் பிரிக்கவே செயல்படும் செயல் மையங்கள்

எருசலேம் தேவ ஆலயமே வியாபார வீடாகி, பின்னர் கள்ளர் குகையாய் மாறிப்போனதே. (யோவான் 2:16; லூக். 19:48)

இன்று எத்தனை வழிபாட்டு ஸ்தலங்கள் கோடி கோடியாய் சம்பாதித்து, **ஒருவருக்கும் பிரயோஜனப்படாத வண்ணம் ஐசுவரியத்தினை அடுக்கி வைக்கும் காப்பகங்களாக மாறிப்போய்விட்டன**; இதனை விவரிக்க அவசியமில்லையே.

15. மதமே முக்கியம், மாற்றம் அல்ல என்ற மனநிலை

ஓய்வு நாளில்தான் சுகமாக ஜெபிக்கவரவேண்டுமா? வேறு நாட்கள் இல்லையா? என்ற கேள்வி இயேசுவின் நாட்களில் ஓங்கித் தொனித்த ஒன்று. (லூக். 13:14)

இப்படி நான், இயேசு பூமியில் மனிதனாய் ஜீவித்த நாட்களையும், இந்த நாட்களையும் ஒப்பிட்டு, அடுக்கிக்கொண்டே போகலாம்.

எனவே, இயேசு அனுப்பப்பட்டது போலவே நானும் அனுப்பப்பட்டுள்ளேன் என்ற நினைவு நம்மை நிரப்ப, அவருக்குள் இருந்த அதே ஆவியானவர் நமக்குள்ளும் கிரியை செய்கிறார் என்கிற அறிவு நம்மை ஆட்கொள்ள முன்னேறுவோம், செயல்புரிவோம். அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் இவ்வுலகில் இருக்கிறோம் (1 யோவான் 4:17) என்ற வசனம் நம்மை உந்தித் தள்ளுவதாக.

நம்மைக் கொண்டு அவர் செய்ய நினைத்த அத்தனையையும் நாம் செய்ய ஒப்புக்கொடுப்போம். எப்படியாகிலும் தேசம் தேவனை அறியட்டும். அதற்கு எதுவும் தடைவராத வண்ணம் நம் எண்ணங்களை சீர்தூக்கிப் பார்ப்போம். நம் மக்களின் சிந்தனை மாறட்டும், நடைமுறைகள் மாறட்டும், நாடு மாறட்டும், நாட்டம் மாறட்டும், நான்கு திசைகளிலும் நற்செய்தி பரவட்டும்.

அன்றைய உலகம் இன்று இருந்தால்
அனைத்தும் சாத்தியம் என்பது தப்புக் கணக்கு

எண்ணிப் பார்த்தால் அத்தனை வித்தியாசம் இல்லை
எண்ணங்களும் மாறவில்லை நடப்பிலும் இல்லை

எண்ணிப் பார்ப்போம் நம் பொறுப்பதனை
என்னையும் நம்புகிறார் என்ற நினைவு மேலோங்கிட

சொல்லொண்ணா எதிர்பார்ப்போடு நிற்கும் நேசரை
செயலினால் ஏமாற்றிட வேண்டாம்

களம் செல்வோம் இயேசுவைப் போல
கயவர்கள் உண்டுதான் கவலையில்லாமலே

பாதை காட்டி சென்றவரின் பணியினை
பாதம் பணிந்து தொடர்ந்து முடிப்போம்

ஆபத்துகள் கண்டு பின் வாங்காமலே
ஆவியின் நிறைவைப் பெற்றோராய் முன் செல்வோம்

தோல்வியில்லை கல்வாரிப் பாதையிலே
தோற்றுப் போவான் எதிரி சாத்தானுமே

அன்பரின் அறுவடைப் பணியில்
அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்

பெருமைக்கு எதிரான தேவன்

இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார். (சங் 12:3)

இது தாவீதினால் எழுதப்பட்டதோர் சங்கீதம்; தாவீது தனது அனுபவத்தினையே இந்த சங்கீதத்தில் பதிவு செய்கிறான். தன்னுடைய வாழ்க்கையின் பெரியதோர் பிரச்சனையினை தாவீது இங்கே எழுதுகின்றான். இச்சங்கீதத்தின் முதல் வசனத்திலும் மற்றும் கடைசி வசனத்திலும் தாவீதின் பெரியதோர் புலம்பலை நாம் காணமுடியும். இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்; உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள் என்று எழுதத் தொடங்கும் தாவீது, மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள் என்று எழுதி முடிக்கிறான். (சங். 12:1,8)

தாவீதின் இந்த சங்கீதத்தில், சில காரியங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டியது மிக அவசியம். "துன்மார்க்கர்" என்றும் "சண்டாளர்" என்றும் தாவீது எழுதுகின்ற சில வார்த்தைகளை நாம் மனதில் கொள்ளவேண்டியது அவசியம். அதுமாத்திரமல்ல, அவர்கள் பக்தியில்லாமலிருக்கிறார்கள், உண்மையில்லாமலிருக்கிறார்கள், பொய் பேசுகிறார்கள், இச்சக உதடுகளால் இருமனதாய்ப் பேசுகிறார்கள் (வச. 2) என்றும் தாவீது எழுதுகின்றதை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். இவை எல்லாவற்றின் மத்தியிலும், தேவன் யார் என்பதையும் தாவீது கூடவே குறிப்பிட்டு எழுதத் தவறவில்லை.

ஆண்டவரை யார் என்று தாவீது அடையாளம் கண்டுகொள்வதற்கு முன்பாக, தனக்கு முன்பாக இருக்கும் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தாவீது உற்றுநோக்குகின்றான். தங்களது அலங்காரமான வாயின் வார்த்தைகளினால் மற்றவர்களைப் புகழுகிறவர்களை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அலங்காரமான வார்த்தைகளைப் பேசி, காரணமில்லாமல் மற்றவர்களைப் புகழுகிறவர்களால் நடக்கிற

காரியங்களையும் தாவீது இந்த சங்கீதத்தில் எழுதுகின்றான். அவர்கள்: எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது; யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள் (சங் 12:4) என்று அவர்களின் நிலையினையும் தாவீது இங்கே சுட்டிக்காட்டுகின்றான். அதுமாத்திரமல்ல, கூடவே, அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்பதையும் தாவீது தனது சங்கீதத்தில் குறிப்பிடத் தவறவில்லை. பேசுவதிலே நிபுணர்கள் அவர்கள்; அவர்களுடைய வார்த்தைகள் தேனைப் போல ஒழுகும்; ஆகாயத்தை வளைத்து வில்லைப் போல நமது கைகளில் கொடுத்துவிடுவதுபோலத் தென்படும்; ஆனால், அவர்களது நோக்கமோ, தங்களது நாவுகளால் நம்மை மேற்கொள்ளவேண்டும் என்பதே. நாங்கள் ஆண்டவருக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல; எங்களது நாவினாலேயே ஜெயித்துவிடுவோம் என்பதே அவர்களது எண்ணம் என்பதையே தாவீது வெளிப்படுத்துகின்றான். **காரணமில்லாமல் யாராவது நம்மை புகழுவார்களென்றால், அவர்களது புகழ்ச்சியில் நாம் வீழ்ச்சியடைந்துவிடாமல், மிகுந்த கவனமுடன் காணப்படவேண்டியது அவசியம்.**

உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் (மத் 5:37) என்றே போதித்தார் இயேசு கிறிஸ்து. எனவே, தேவையின்றி யாரையும் நாம் புகழ்ந்துவிடக்கூடாது; அப்படிச் செய்வோமென்றால், நம்மை அறியாமலேயே நம்மை உண்டாக்கின ஆண்டவரையே நாம் மறுதலிக்கும் நிலை உண்டாகிவிடும்; என்றபோதிலும், இதனை அநேகர் புரிந்துகொள்ளுவதில்லை. “நீங்கள் இல்லாமல் என்னால் வாழ இயலாது” என்றோ, “நீங்கள் இல்லையென்றால் நான் இறந்துவிடுவேன்” என்றோ “நீங்கள்தான் எனக்கு எல்லாம்” என்றோ பிறர் சொல்லும் வார்த்தைகளைக் குறித்து நாம் எச்சரிக்கையோடிருக்கவேண்டியது அவசியம். இப்படிப்பட்ட வார்த்தைகளினால் வளைத்துப்போடப்பட்டு, வலைக்குள் விழுந்துவிட்ட வாலிபர்கள் இன்றைய நாட்களில் ஏராளம்.

நாம் சிறுவயதில் கேட்ட கதையே இதற்கு நல்லதோர் உதாரணம். கிராமம் ஒன்றில் ஒரு பாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்தாள். பாட்டி சற்று அந்தப்பக்கம் திரும்பினபோது, காத்திருந்த காக்கை ஒரு வடையைத் தூக்கிக்கொண்டு பறந்து சென்று, ஒரு மரக்கிளையின் மேல் அமர்ந்திருந்தது. மரத்தின் கீழேயோ நரி ஒன்று பசியுடன் நின்றுகொண்டிருந்தது. காகத்தின் வாயிலிருந்த வடையைப் பார்த்த நரி,

அதனைச் சாப்பிடுவதற்காக தந்திரமான யோசனை செய்தது. கேட்டால் காகம் நிச்சயம் தராது என்பதை அறிந்த நரி, காகத்தைப் புகழ்ந்து பேசியது. அதுவரை தன்னை யாரும் புகழ்ந்து பேசியதைக் கேட்டிராத காகம், நரியின் புகழ்ச்சியான வார்த்தைகளினால் மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தது. அப்போது, ஒரே ஒரு பாட்டு பாடும்படியாக நரி காகத்தினிடம் கேட்க, காகமும் சந்தோஷத்துடன் பாடத் தொடங்கியது; வாயிலிருந்த வடையோ கீழே விழுந்தது, அதனைக் கண்ட நரி, உடனே வடையைத் தூக்கிக்கொண்டு ஓடி மறைந்தது; காகமோ ஏமாந்து நின்றது. இந்த நிலைதான் இன்று அநேகருடைய வாழ்க்கையிலும் காணப்படுகின்றது.

எனவே, தாவீது, தேவையில்லாமல் வீணாக பிறரைப் புகழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்களை “சண்டாளர்கள்” என்று எழுதுகின்றான். தேவையில்லாமல் யாரையும் நாம் புகழக்கூடாது. மற்றவர்களைப் பாராட்டுவதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும்; பிற மனிதர்களுக்குள்ளே மறைந்திருக்கும் காரியங்களை, தாலந்துகளை அவர்களை உற்சாகப்படுத்தி, உலகம் அறியும்படியாக வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, தொடர்ந்து அவர்களைப் பாராட்டி உயர்ந்த நிலைக்கு நேராக வழிநடத்திச் செல்வது நன்மையானதே; என்றபோதிலும், ஒருவருக்குக் கொடுக்கப்படவேண்டிய மரியாதையைக் காட்டிலும் கூடுதலாகவோ, அதிகமாகவோ அவர்களைப் புகழுவதனை நாம் தவிர்க்கவேண்டும். யாரோ ஒரு மனிதனிடத்தில் மறைவாகக் காணப்படும் தாலந்துகளை வெளிக்கொண்டுவருவதற்காக நாம் அவர்களைப் பாராட்டுவது தவறல்ல; என்றபோதிலும், யாரிடத்திலிருந்தோ எதையாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில், வீண் புகழ்ச்சியான வார்த்தைகளை நமது வாயினால் பேசிவிடாதபடி நாம் எச்சரிக்கையோடிருக்கவேண்டியது அவசியம்.

ஆண்டவரைக் குறித்து நாம் தியானிக்கும்போது, அவர் கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர், அன்புள்ளவர் என்று சொல்லக்கூடும். என்றபோதிலும், **இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார்** (சங் 12:3) என்ற அவருடைய மறுபுறத்தையும் நாம் மனதில்கொள்ளவேண்டியது அவசியம்.

இதனையே யாக்கோபும், துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே

ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? (யாக் 3:10,11) என்று எழுதுகின்றார். யாக்கோபு சற்று ஆழமாக இதனை நமக்கு விளங்கும்படியாக எழுதுகின்றார். **இருமனமான வார்த்தைகள் எந்த மனிதனின் வாயிலிருந்து புறப்படுகின்றதோ, அந்த மனிதனின் உட்புறமும் கறைபட்டிருக்கிறது** என்பதையே யாக்கோபு சுட்டிக்காட்டுகின்றார். இரண்டுவிதமான வார்த்தைகளைப் பேசுகின்ற இப்படிப்பட்ட மனிதர்களை தேவன் நறுக்கிப்போடுகிறார்.

கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது (சங் 12:6) என்றே எழுதுகின்றான் தாவீது. கர்த்தருடைய வார்த்தை களங்கமில்லாதது, சுத்தமானது. தாவீது சொல்லவருவது என்ன? **நாம் ஆண்டவருடைய வார்த்தைகளை, வசனங்களை அடிக்கடி பேசவேண்டும்** என்பதே. அவைகளைப் பேசப் பேசப் பேச நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும், செயல்களும் பரிசுத்தப்படும்; அதுமாத்திரமல்ல, வீணான பிற மனிதர்களுடைய புகழ்ச்சிகளில் நாம் விழுந்துவிடாமலும் கர்த்தருடைய வசனம் நம்மைக் காக்கும்; அவ்வாறே, நாமும் வீணாகப் பிறரைப் புகழ்ந்துவிடாதபடியும் நம்மைத் தற்காக்கும். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லப் பழகுவோம். அவரது சத்திய வசனம் நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்யட்டும். நம்முடைய வாழ்க்கையில் இருமனமான வார்த்தைகள் வேண்டாம்; தித்திப்பும் கசப்புமான வார்த்தைகள் வேண்டாம். உண்மையான ஊற்றுக்கண் நம்மிலே உருவாகட்டும். “சண்டாளர்கள், பக்தியில்லாதவர்கள், பொய் பேசுகிறவர்கள், தேவனுக்குப் பயப்படாதவர்கள், துன்மார்க்கர்கள்” என்று பட்டியலிடப்படுவோரின் வரிசையில் நம்முடைய வாழ்க்கையும் சேர்ந்துவிடக்கூடாது.

ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே (ஏசா 6:5) என்று சொன்ன ஏசாயா தீர்க்கதரிசியைப்போல நாமும் சொல்லுவோம், அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து, அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியானது (ஏசா 6:6,7) என்ற அனுபவம் நமக்கு கிடைக்கட்டும்.

ஊரடங்கு கால உதவிகள்

உலகமெங்கும் பரவிவரும் கொரோனா தொற்றின் விளைவாக, பணித்தள மக்களையும், விசுவாசிகளையும் சந்திக்க இயலாமலும், ஒன்றாகக் கூடி தேவனை ஆராதிக்க முடியாமலும் ஊழியங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வருமானத்திற்கான வாசல்கள் அனைத்தும் அடைபட்டிருப்பதினால், வாழ்க்கையின் அன்றாடக தேவைகளுக்குக்கூட வழியில்லாமல் அல்லல்படும் நிலையே ஆங்காங்கே ஜனங்கள் மத்தியில் காணப்படுகின்றது. திடீரென அரசாங்கம் பிறப்பித்துவிட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக, வீட்டை விட்டே வெளியேற இயலாத சூழ்நிலையில், தினக்கூலியினையே நம்பி தங்களது அன்றாடக வாழ்க்கையினை நகர்த்திக்கொண்டிருந்த மக்களது குடும்பங்களின் நிலை மிகவும் பரிதாபமான நிலைக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது வேதனையானதே. வாசலை விட்டு வெளியேறினால் வியாதி, வீட்டிற்குள்ளேயே முடங்கியிருந்தாலோ பசி; இவ்விரண்டிற்கும் நடுவிலே உறக்கமின்றித் தவிப்பதுடன், தங்களது அன்றாடக தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய இயலாத நிலைக்கு பூஜ்யமாகவே நிற்கிறது பலரது வாழ்க்கை. எனவே, பாதிக்கப்பட்டுள்ள நமது பணித்தள மக்களை மனதில் கொண்டவர்களாக, **'GEMS Eden'** மூலமாக உதவிகளைச் செய்துவருகிறோம்.

தேவைகள் கண்ணெதிரே பெரிதாகப் பரந்திருப்பினும், நம்மால் இயன்ற உதவிகளை பணித்தளங்களில் தொடர்ந்து செய்துவருகின்றோம். ஏப்ரல் 7 அன்று பட்டனுவா டோலாவில் முஷார் இனத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கும், ஏப்ரல் 10 அன்று, தரிஹட் பணித்தளத்தில் 250 குடும்பங்களுக்கும், ஏப்ரல் 12 அன்று சசராம் பணித்தளத்தில் 200 குடும்பங்களுக்கும், ஏப்ரல் 19 அன்று கருவந்தியா பணித்தளத்தில் 50 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்களை வழங்க கர்த்தர் உதவி செய்தார். காவல்துறையினர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் நமக்குத் துணை நின்றனர். ஆலயங்களில் ஆராதிக்க இயலாதபடி விசுவாசிகள் தூரமாக தங்கள் வீடுகளில் முடங்கியிருக்கும் இச்சூழலில், பணித்தளங்களிலுள்ள மக்கள் வியாதியினின்று பாதுகாக்கப்படவும், இக்கட்டான இச்சூழ்நிலையில் விசுவாசத்தினை விட்டுவிடாமல் உறுதியாக ஆண்டவரில் நிலைத்திருக்கவும் தொடர்ந்து ஜெபித்துவருகின்றோம்.

ஊரடங்கு கால உதவிகள்

தாரிஹட்

கருவந்தியா

பட்டனுவாடோலா

சசராம்

பணித்தள விண்ணப்பங்கள்

சாராம்

மகடிகஞ், நிக்கா, டாக்கியா, பட்யாபாத், ஹேர்க்சினிம், மைகோ ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்படவும், ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ள சிம்ராவைச் சேர்ந்த 8 புதிய விசுவாசிகளுக்காகவும், வேதாகமப் பயிற்சி மையத்தில் படித்துவருகிற மாணவர்களுக்காகவும் மற்றும் வியாதிப்பட்டிருக்கும் விசுவாசிகளின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

கோராரி

சரீரத்தில் அற்புத சுகத்தைப் பெற்றுக்கொண்ட பாரளி கிராமத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான சாவித்திரியின் ஆத்தும இரட்சிப்பிற்காகவும், மதுப் பழக்கத்திற்கு அடிமையாக உள்ள சந்தேந்திர குமாரின் விடுதலைக்காகவும், இப்பணித்தள ஊழியரது மனைவியின் உடல்நிலை சீராகவும் ஜெபியுங்கள்.

சிவ்சாகர்

விசுவாசத்தில் பின்வாங்கிப்போன ஜானலி, பைரியா, தெலாரி கிராம விசுவாசிகள் மீண்டும் சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், சுவிசேஷத்திற்கு புதிய இடங்களில் வழி திறக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் உடன்பிறந்தவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

சித்தயினி

ஜனன்சோன் பகுதியில் சிறுவர்கள் மத்தியில் செய்யப்படுகிற ஊழியத்திற்காகவும், ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிற பூல்குமாரி, கிருஷ்ணா, அபிகாசீமா, கீதா, கிருஷ்னா ஆகியோருக்காகவும் ஜெபியுங்கள்.

பகத்கஞ்ச்

சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டிய நிஷா தேவி, பிரியங்கா தேவி, பிரமோத்ராம் ஆகியோரின் இரட்சிப்பிற்காகவும், பொதுத் தேர்வு எழுதவிருக்கிற இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் உயர் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

மலியாபாக்

கவயி, டேவலி, மலியாபாக், படசா, பட்ரிமா, ஜன்சேனா, ரூப்சாகர், ஹிராபுட் ஆகிய கிராமங்களில் பின் தொடர் ஊழியம் தடையில்லாமல் செய்யப்படவும், உன்சேல் கிராமத்தைச் சேர்ந்த குணசேகரன் அவர்களுக்கு சிறுநீரகப் பிரச்சனை சுகமாகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகள் ஆசீஷ், குஷ்பு, மற்றும் ஆதித்யா ஆகியோரின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

நட்வார்

விஷ்வாமபார்பூர், பாலூனிடோலா, சகுவாரி, கார்மையினி, மதய்பூர், சரவண் — நட்வார், தெனுவா ஆகிய கிராமங்களில் ஜெபக்கூடுகை ஆரம்பிக்கப்படவும், கடந்த 2 வருடங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு கஷ்ட்டப்பட்டு வருகிற 9 வயது நிரம்பிய பிரகாஷ்குமார் பூரண விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

சூர்யாபூர்

சக்கிரியா, சதக், குசும்கல், நாராண்பூர், தான்காட் ஜோன்ஹி ஆகிய இடங்களில் வரும்நாட்களில் எதிர்ப்பின்றி தொடர் ஊழியம் செய்யப்படவும், வாலிபர்கள் மத்தியில் செய்யப்படுகிற ஊழியத்திற்காகவும், சவுரியா கிராமத்தைச் சேர்ந்த ரீட்டாதேவி விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபியுங்கள்.

டும்ராவோன்

ஞானஸ்தானம் பெற்ற விஜய்குமார், சத்தேந்திராவ், சாந்திதேவி, சாராதேவி, அஜித்துமார், பிரியங்காதேவி, தர்மசீலா தேவி, மீனாதேவி ஆகியோர் சாட்சியாக வாழவும், விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

நியாஜிபூர்

ராஜ்பூர், ரங்கோலிநகர் புரா, எக்கோனா, நாரான்பூர், மீயாஜீபூர் ஆகிய கிராமங்களில் உள்ள விசுவாசிகளின் குடும்பங்களுக்காகவும், இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும் ஜெபியுங்கள்.

நாசரிகஞ்ச்

இப்பணித்தள சபை ஆராதனையில் கலந்துகொள்ளுகிற விசுவாசிகளை குழப்பிவருகிற மதவாதிகளின் செயல்கள் மாறவும், கர்ப்பப் பையில் பிரச்சனை மற்றும் சக்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள சாந்திதேவியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ராஜ்பூர்

குஸ்தர், எச்சரா, தரிகட், சபியா, அடிபூர், ராஜ்பூர், பர்னாடெரி, போர்த்பூர் ஆகிய 8 இடங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக புதிய ஆத்துமாக்கள் ஆராதனையில் கலந்துகொள்ளவும், பிசாசு பிடியால் பாதிக்கப்பட்டிருக்கிற வாலிபப் பிள்ளைகளின் விடுதலைக்காகவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு நிலம் கிடைக்கவும், அதில் ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

காஜிப்பூர்

தடைப்பட்டுள்ள சுவிசேஷ ஊழியம் தொடரவும், வாய் பேசாமல் இருக்கும் யாஷ்குமாரின் குழந்தை சீக்கிரத்தில் பேசவும், சுமித்ரா, குஷ்புகுமாரி, அபிஷேக்குமார், குந்தன்குமார் ஆகியோரின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

சோன்ஹான்

இப்பணித்தள சபையில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிற 14 புதிய விசுவாசிகளுக்காகவும், வியாதியினால் பாதிக்கப்பட்டு சீர பெலவீனத்தோடு இருக்கிற சுமித்திராதேவி, தேவந்தாதேவி ஆகியோரின் பரிபூரண சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

அக்கோலி

சுவிசேஷத்திற்கு புதிதாக வழி திறக்கப்பட்டு முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட ஏக்சஹா, மொஹமத்பூர், பயோகௌலி, குட்னி ஆகிய இடங்களில் தொடர் ஊழியம்

தடையில்லாமல் நடத்தப்படவும், தடைப்பட்டுப்போன வீட்டு ஜெபக் கூடுகை தொடர்ந்து நடத்தப்படவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

சக்கியா

போதை வஸ்துவுக்கு அடிமைப்பட்டிருக்கிற இப்பகுதி வாலிபர்களின் விடுதலைக்காகவும், வாகன விபத்தினால் பாதிக்கப்பட்டு படுகையில் இருக்கும் பேஜ்னாதேவி சுகமாகி எழுந்து நடக்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் அபிஷேக் மற்றும் சூசன்னா ஆகியோரின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

பாபுவா

புதிதாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட 13 விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருந்து சாட்சியாக வாழவும், சீமாகுமாரிக்கு வலிப்பு வியாதியிலிருந்து சுகம் கிடைக்கவும், வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், இப்பணித்தள ஊழியருடைய மகன் ரிச்சட்குமார் மகள் நிஷிகுமாரி ஆகியோருடைய ஜெபியுங்கள்.

ஹாட்டா

ஜோதிகுமாரி, ரிங்குகுமாரி, லஷ்மிதேவி, சுரேஷ் பிரசாத், சிவ் பிரஜாபதி ஆகியோர் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், ரிங்குதேவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், தனது மனைவியைவிட்டு பிரிந்து சென்ற காஷ்மீரிதேவியின் கணவர் மீண்டும் மனைவியோடு இணைந்து வாழவும் ஜெபியுங்கள்.

துர்காவதி

சுனிதாதேவி கணவருடைய இரட்சிப்பிற்காகவும், ஞாயிறு பாடசாலை வகுப்பில் கலந்துகொண்டு வசனத்தைக் கேட்டுவந்த சிறுவர்களின் ஆவிக்குரிய எதிர்கால வாழ்க்கைக்காகவும், கை எலும்பு முறிவு ஏற்ப்பட்டுள்ள ரவிகுமாரின் தகப்பனாருக்கு பூரண சுகம் கிடைக்கவும், இந்த பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பு மற்றும் சீரா ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890, 9944755640
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden,
Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Mumbai	Gala B-47, 2nd Floor, Sharad Industrial Estate, Lake Road, Near Bhandup Police Station, Mumbai - 400 078 Cell : 9322730294, 02225949999
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

GEMS MEDIA

Transforming Nations through Media Ministry

Watch Us on YouTube gemsmediaonline

Regd. office :
GEMS Educational and Media Services
11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :
GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567
(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center
14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

Private circulation

தனிப்பிரதி ரூ10-
ஆண்டு சந்தா ரூ100-

To

....

....

....

....